https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்
# புதுசுடர்
உண்மைக்கே முதலிடம்
30th JULY 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 38

# 13 வேண்டுமா இல்லையா?

## பொறுப்பு நாடாளுமன்றத்திடம்...

13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாடாளுமன்றம் தீர்மானமெடுக்கும் வகையில் ஜனாதிபதி அதிகாரத்தை வழங்கியுள்ளார். அதற்கு ஏற்ப கட்சித் தலைவர்கள் அவர்களது யோசனையை 02

# ரணிலை பாதுகாப்பதற்கு

## பசில் தீர்மானம்




அமைச்சுப் பதவிகள் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை.ரணிலை ஜனாதிபதி பதவியில் இருந்து பாதுகாப்பது என்ற முடிவை பசில் ராஜபக்ஸ எடுத்துள்ளார் என்று அறிய முடிகிறது.

மொட்டு கட்சி முக்கியஸ்தர்களுக்கும் பசிலுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது. 02










# மேலும் 32 லட்சம் ஏழைகள்

நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக நடுத்தர வர்க்கத்தில் இருந்து 32 லட்சம் பேர் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

2023 இல் மேலும் 5 லட்சம் ஏழைகள் இதில் இணைவார்கள் என்று உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

2021 இல் 13.1 வீதமாக இருந்த வறுமை 2022 இதில் 25 வீதமாக உயர்ந்தது என்று அவர் மேலும் கூறியுள்ளார். 2023இல் அது 2.4 வீதத்தால் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.






புதுச்சுடர்
www.puthusudar.lk
2023 JULY 30 - SUNDAY

# 13 இன் எதிர்காலம்?

இலங்கையின் அரசியல் தளத்தில் இப்போது அதிகம் பேசப்படுவது 13 ஆவது திருத்தச் சட்டம்–அரசியல் தீர்வு பற்றித்தான்.

அதுவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியா போய் வந்ததும் இந்தச் பேச்சு அதிகமாகியுள்ளது.இலங்கைக்கு இந்தியா எந்தவோர் உதவியை செய்வதற்கு முன்வந்தாலும் அந்நாடு முதலில் விதிக்கும் நிபந்தனையாக இருப்பது அல்லது கோரிக்கையாக இருப்பது 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான்.

அது இந்தியாவின் தலையீட்டால் கொண்டுவரப்பட்டது என்பதால் அந்த முறைமை இலங்கையில் இருக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

அந்த முறைமையால் வடக்கு–கிழக்கு பிரச்சினை தீருகிறதா இல்லையா என்பதை விட தனது ஆதிக்கத்துக்கு சான்றாக 13 என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும்.

அந்த வகையில் தற்போது இந்தியா சென்ற ஜனாதிபதியிடம் 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி கொடுத்துள்ளார்.

அதனால் இந்தியாவில் இருந்து திரும்பிய வேகத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வகட்சி மாநாட்டை கூட்டினார்.வடக்கு–கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரங்களைத் தவிர எல்லாவற்றையும் வழங்கப் போவதாக அறிவித்தார்.

இதை நடைமுறைப்படுத்தும்போது தெற்கில் இருந்து–சிங்கள மக்களிடமிருந்து எதிர்ப்பு வந்தால் அதை சமாளிப்பதற்காக–அதில் இருந்து தப்புவதற்காக ரணில் 13 இன் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்துள்ளார்.

13 என்பது ஜனாதிபதியுடன் தொடர்புபட்ட ஒன்றல்ல நாடாளுமன்றத்துடன் தொடர்புபட்டது. அதை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்று நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று கூறி ஜனாதிபதி இப்போது பந்தை அந்தப் பக்கம் திரும்பியுள்ளார்.

இது தொடர்பில்–13 ஐ அமுல்படுத்துவது தொடர்பில் கட்சித் தலைவர்கள் அவர்களின் யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு 2 வார கால அவகாசமும் வழங்கியுள்ளார் ஜனாதிபதி. அந்த யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

ஒருவேளை, நாடாளுமன்றத்துக்குள் 13 இற்கு எதிரான நிலைப்பாடு அதிகமாக இருந்தால் நாடாளுமன்றத்தின் தலையில் போட்டுவிட்டு தமிழ் மக்களிடமிருந்து ரணில் தப்பிவிடுவார்.

ஒருவேளை,13இற்கு ஆதரவான நிலைப்பாடு அதிகமாக இருந்தால்–அதை சிங்கள மக்கள் எதிர்த்தால் அதையும் நாடாளுமன்றின் தலையில் போட்டுவிட்டு சிங்கள மக்களிடமிருந்து தப்பிவிடுவார்.

இந்தியாவுக்கும் இதே வேலையைச் செய்வார்.இதனால் 13 இன் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.13 அமுல்படுத்தப்படுமா ? செயலற்றுக் கிடக்கும் மாகாண சபைகளை மீண்டும் இயக்குவதற்காக தேர்தல் நடத்தப்படுமா என்ற கேள்விகள் இப்போது எல்லோரது மனங்களிலும் எழுந்துள்ளன.

உண்மையில் 13 ரணிலுக்கு இப்போது தேவைப்படுவது வடக்கு–கிழக்கு தமிழர்களின் வாக்குகளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொள்வதற்காகத்தான்.இல்லையென்றால் அவரும் இதுபற்றிப் பேசமாட்டார்.

பொருளாதாரரீதியில் நாடு வீழ்ந்து கிடக்கும் இந்த நிலையில் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கே கவனம் செலுத்த வேண்டும்இப்போது அதிகாரப் பகிர்வுபற்றியெல்லாம் பேச முடியாது என்று கூறிவிட்டு ரணில் சென்றிருப்பார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் அவருக்கு கடும் சவாலாக அமைந்துள்ளதால் வடக்கு–கிழக்கு தமிழர்களின் வாக்குகள் அவருக்கு கட்டாயம் தேவை. அதனால்தான் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அரசியல் தீர்வுபற்றி பேசுகிறார்.அதற்கான செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளார்.

இருந்தும்,இது ஒரு நாடகம். ஜனாதிபதி தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை குறிவைத்த செயற்பாடு என்று உணர்ந்ததால் கஜேந்திரன் பொன்னம்பலத்தின் கட் சி இந்த வேலைத்திட்டத்திற்குள் வரவில்லை. அவர்கள் விலகி நிற்கிறார்கள்.

உண்மையில் 13இற்கு என்ன நடக்கப் போகிறதுஅரசியல் தீர்வுக்கு என்ன நடக்கப்போகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

## 13 வேண்டுமா...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

சமர்ப்பிப்பதற்கு 2 வார கால அவகாசம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் இருப்பது ஜனாதிபதியாகிய என்னிடமல்ல நாடாளுமன்றத்திடம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வகட்சி கூட்டத்தில் கூறி இருந்தார்.

அதன்படி 13 ஐ நடைமுறைப்படுத்துவது தொடர்பான பொறுப்பு எம்பிக்களின் கைகளுக்கு வந்துள்ளது.

இதை நடைமுறைப்படுத்துவது தொடர்பான யோசனையை முன்வைப்பதற்கு கட்சி தலைவர்களுக்கு 2 வார கால அவகாசத்தை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

பிரதமர் தலைமையிலான அமைச்சரவை உப குழு அந்த யோசனையை ஆராய்ந்து பார்த்து நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும்.

# ஜப்பான் வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

~ ஜப்பான்–இலங்கை ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு இரு தரப்பின் அர்ப்பணிப்பும் வலியுறுத்தப்பட்டது

~ இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு ஜப்பான் வழங்கும் ஆதரவுக்கு ஜனாதிபதி பாராட்டு

~ இலகு ரயில் திட்டம் உட்பட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை விரைவுபடுத்த அவதானம்

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா (HAYASHI Yoshimasa) இன்று (29) கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை நினைவு கூர்ந்து இந்தக் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டதுடன், பல்வேறு துறைகளில் அந்த உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இரு தரப்பும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டிற்கு ஜப்பான் அரசாங்கம் வழங்கும் ஆதரவிற்கு இதன்போது நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடன் மறுசீரமைப்பு தொடர்பான பொதுவான தளத்தை மேம்படுத்தும் மற்றும் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனுடன் நடைபெற்ற கலந்துரையாடல் குறித்தும் விளக்கினார்.

மேலும், ஜப்பான்–இலங்கை ஒத்துழைப்பின் முக்கிய விடயமான இலகு ரயில் திட்டம் (டுசுவு), துறைமுக கிழக்கு முனையம், கண்டி அபிவிருத்தித் திட்டம், மத்திய அதிவேக நெடுஞ்சாலை மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விரிவாக்கத் திட்டங்களை துரிதப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்து சமுத்திர பிராந்தியத்தை



அமைதியான மற்றும் நிலையான பிராந்தியமாக பேணுவதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டதுடன், பிராந்திய மற்றும் பல்வேறு உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரும் கலந்துரையாடினர்,


## ரணிலை...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

மொட்டு கட்சி முக்கியஸ்தர்கள் 10 பேருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காமல் ஜனாதிபதி இழுத்தடித்து வருகிறார்.

இதனால் மொட்டு கட்சியினர் ரணிலுடன் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு இருக்கின்றனர்.

அமைச்சுப் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ரணிலை ஜனாதிபதி பதவியில் இருந்து பாதுகாப்பதன்மூலம்தான் மொட்டு கட்சியைக் காப்பாற்ற முடியும் என்ற நிலை இருப்பதால் பசில் மேற்படி முடிவை எடுத்துள்ளார் என்று அறிய முடிகிறது.








# ஜனாதிபதி தேர்தல்: எல்லோருக்கும் பெரும் சவால்

**டயானா கமகே அச்சுறுத்தல் விடுப்பதால் தொடர்ந்தும் உங்களால் தொலைபேசி சின்னத்துடன் பயணிக்க முடியுமா?**

**ஜனாதிபதி தேர்தலுக்கு எப்படி தயாராகிறீர்கள்?**

**மக்கள் கட்சி அரசியலில் இருந்து விலகி மிதப்பு வாக்குகளாக மாறியுள்ளார்களே?**

**ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களின் வாக்குகள் எந்தப் பக்கம் செல்லும் ?**

**உங்கள் தலைவர் சஜித் தகுதியானவர் என்று மக்கள் நம்புவார்களா?**

– இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்பி திஸ்ஸ அத்தநாயக்க.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : டயானா கமகே அச்சுறுத்தல் விடுப்பதால் தொடர்ந்தும் உங்களால் தொலைபேசி சின்னத்துடன் பயணிக்க முடியுமா?**

பதில் : ஒரு பிரச்சினையும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி எங்கள் தேசிய முன்னணி என்ற பெயரில் இருந்தது. டயானா கமகேதான் அதன் செயலாளர்.

2020 தேர்தல் நேரத்தில் உடனடியக் கட்சி ஒன்றைப் பதிவு செய்ய முடியாது என்பதால் அந்தக் கட்சியை டயானாவிடம் இருந்து பெற்று பெயரையும் சின்னத்தையும் மாற்றி ஐக்கிய மக்கள் சக்தி என்று பதிவு செய்தோம்.

இப்போது இந்தக் கட்சி டயானாவுக்கு சொந்தமில்லை.அவர் இனி உரிமைகோர முடியாது.

**கேள்வி : ஜனாதிபதி தேர்தலுக்கு எப்படி தயாராகிறீர்கள்?**

பதில் : எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் எல்லோருக்கும் ஒரு சவால்தான்.50.1 வீத வாக்குகளை பெற வேண்டும் வெற்றி பெறுவதற்கு.இப்போது அது கடும் சவால்.

எப்படியும் 65 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறுபவர்தான் வெற்றிபெற முடியும்.இதற்கு ஏற்ப எம்து கட்சி தயாராகி வருகிறது.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் 3 விடயங்களை கவனத்தில்கொள்வார்கள். அதில் முதலாவது தலைவர்,இரண்டாவது கொள்கை.மூன்றாவது கட்சி.

முன்புபோல் பொய் கூறி வெல்ல முடியாது.சரியான கொள்கை–திட்டம் இருக்க வேண்டும்.அப்போதுதான் மக்கள் ஆதரிப்பார்கள்.

மக்கள் இந்தப் பொருளாதார பிரச்சினையோடு நன்றாகப் பாடம் கற்றுவிட்டர்கள்.இனி அவர்களை பொய் கூறி ஏமாற்ற முடியாது.

**கேள்வி : மக்கள் கட்சி அரசியலில் இருந்து விலகி மிதப்பு வாக்குகளாக மாறியுள்ளார்களே?**

பதில் : ஆம்..அது 100 வீதம் உண்மை.2015 ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிக்கு 25 வீத மிதப்பு வாக்குகள் கிடைத்தன.

அதேபோல்,2019இல் 40 வீதமான மிதப்பு வாக்குகள் வீழ்ந்தன. அதேபோல்,எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மிதப்பு வாக்குகள்தான் வெற்றியைத் தீர்மானிக்கும்.

**கேள்வி : ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களின் வாக்குகள் எந்தப் பக்கம் செல்லும் ?**

பதில் : அது 2020 தேர்தலில் தெரிந்தது.அடுத்த தேர்தலில் ரணில் வெற்றிபெறுவதற்கு கடும் முயற்சி எடுப்பார். மொட்டு கட்சியில் வேறு வேட்பாளரை நிறுத்துவதற்கான திட்டம் ஒன்று இருக்கிறது.

ஜேவிபியின் தனியாக போட்டியிடுவார்கள்.

இவ்வாறு கட்சிகள் பிரிந்து பிரிந்தே போட்டியிடும்.இருந்தாலும்,மக்கள் சரியான கொள்கையுள்ள பக்கமே செல்வார்கள். நாம் இவர்களை வெற்றிகொள்ளும் திட்டத்தில் உள்ளோம்.

எல்லா சவால்களையும் வெற்றிகொள்வதற்கு நாம் தயார்.

**கேள்வி : உங்கள் தலைவர் சஜித் தகுதியானவர் என்று மக்கள் நம்புவார்களா?**

பதில் : 2019 ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட்டபோது 56 லட்சம் மக்கள் வாக்களித்திருந்தனர்.இந்தச் சந்தர்ப்பத்தில் இருக்கின்ற தகுதியான தலைவர் சஜித் பிரேமதாஸாதான்.

**கேள்வி : அவர் கைக்கு வந்த வாய்ப்பைத் தவரவிட்டுவிட்டார் என்ற குறை ஒன்று இருக்கிறதே?**

பதில் : பிரதமர் பதவியை ஏற்படுமாறு கோத்தா தொலைபேசி மூலம் சஜித்திடம் கேட்டார்.அவர் கட்சியுடன் பேசிவிட்டு பதில் சொல்வதாக சொன்னார்.

பின்னர் இதுபற்றி கூடிப் பேசி நிபந்தனைகளின் அடிப்படையில் பிரதமர் பதவியை ஏற்பது என்ற முடிவுக்கு வந்தோம்.

முதலாவது நிபந்தனையாக கோத்தா பதவி விலக வேண்டும்.அதற்கான திகதியை அறிவிக்குமாறு சொன்னோம். அவர் 15 மாதங்களின் பின்தான் விலகுவதாக சொன்னார்.

அதை நாம் ஏற்கவில்லை.

அடுத்த நிபந்தனை அமைச்சரவையை நியமிக்கும் அதிகாரம் பிரதமருக்கு இருக்க வேண்டும் என்று கூறினோம்.

கோத்தாவோ மொட்டு கட்சியில் 15 பேரும் ஐக்கிய மக்கள் சக்தியில் 5 பேரும் அமைச்சர்களாக நியமிப்பதற்கு அனுமதி தருவதாகக் கூறினார்.

அதையும் நாம் நிராகரித்தோம்.

மேலும் 6 மாதங்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான சட்ட நடவடிக்கைகளுக்கு மொட்டு கட்சி ஆதரவு தர வேண்டும் போன்ற பல நிபந்தனைகளை எழுதி நாம் கோத்தாவுக்கு அனுப்பினோம்.

கோத்தா அந்த நிபந்தனைகளை நிராகரித்துவிட்டு ரணிலை அழைத்துப் பேச்சு நடத்தினார்.

ரணில் எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை.அப்படி விதிக்க வேண்டிய தேவை அவருக்கு இல்லை.அவர் தனி எம்பி மட்டுமே.

கோத்தாவுக்கு தேவை ராஜபக்ச குடும்பத்தைப் பாதுகாக்கும் ஒருத்தர். அதற்கு பொருத்தமான ஒருவராக ரணில் இருந்ததால் சஜித்தை–அவரது நிபந்தனைகளை நிராகரித்துவிட்டு ரணிலை பிரதமராக நியமித்தார்.

**கேள்வி : ராஜபக்ச குடும்பத்தை பாதுகாப்பதுதான் கோத்தாவின் நோக்கம் என்றால் ஏன் சஜித்தை முதலில் அழைக்க வேண்டும்?**

பதில் உண்மையில் அது ஒரு நடிப்பு. ரணிலை பிரதமராக்குவதற்கு கோத்தா ஏற்கனவே தீர்மானித்துவிட்டார். ரணிலும் கோத்தாவும் பல தடவைகள் திருட்டுத்தனமாக சந்தித்து பேசிவிட்டார்கள்.

சஜித் எப்படியும் நிபந்தனை விதிப்பார்.அதை ஏற்க முடியாது என்று காட்டிக்கொண்டு ரணிலுடன் பேசுதல்.அவர் நிபந்தனை விதிக்கவில்லை.அதனால் அவரை பிரதமராக நியமித்தேன் என்று காட்டுதல்.

அந்த நாடகத்தின் அடிப்படையில்தான் சஜித் நிராகரிக்கப்பட்டு ரணில் பிரதமராக்கப்பட்டார்.

**கேள்வி : தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் உங்களது நிலைப்பாடு ?**

பதில் : சிலர் கூறுகிறார்கள் பொருளாதார நிலைமை சீராகிவிட்டது என்று.இது தற்காலிக ஏற்பாடு மட்டுமே.

சர்வதேச கடன் செலுத்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.மீண்டும் கடன் செலுத்தத் தொடங்கும்போதும்– இறக்குமதி தடை நீங்குபோதும் மீண்டும் டொலர் தட்டுப்பாடு ஏற்படும்.பொருளாதார நெருக்கடி ஏற்படும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் ஆரம்பத்திலேயே சென்றிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.

நாம் நாட்டை பாரமேற்றிருந்தால் இந்த நிலைக்கு நாட்டைத் தள்ளியிருக்கமாட்டோம்.

**கேள்வி : உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற போராட்டத்தைக் கைவிட்டுள்ளீர்களா?**

பதில் :இல்லை ..நாம் கைவிடவில்லை. அதற்கான அணைத்து வகையான போராட்டங்களையும் நாம் முன்னெடுக்கிறோம்.நாம் நீதிமன்ற தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கிறோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மாத்திரமல்ல.மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம்.

**கேள்வி : நீங்கள் அறிந்த வகையில் ஜனாதிபதி எந்தத் தேர்தலுக்குச் செல்வதற்குத் தயாராகிறார்?**

பதில் : ஜனாதிபதி தேர்தல். ஆனால்,அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்துக்கு முன் தேர்தலுக்கு செல்ல முடியாது.அப்படிச் சொல்வதாயின் அரசமைப்பை திருத்த வேண்டும்.

பரவாயில்லை.அவ்வாறு திருத்தம் செய்வதற்கு நிபந்தனைகளற்ற முறையில் நாம் ஆதரவு வழங்கத் தயார்.

**கேள்வி : ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றுசேருமா?**

பதில் : அடிமட்டத்தில் உள்ள ஐக்கிய தேசிய ஆதரவாளர்களை ஒன்றுசேர்க்கும் நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

**கேள்வி : 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

பதில் : 13ஐ சட்ட விரோதமானது என்று சொல்ல முடியாது. இதில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தவிர ஏனைய அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது. வடக்கு–கிழக்கில் இந்த அதிகாரங்களையும் தருமாறு தொடர்ச்சியாக கேட்டு வருகிறார்கள். இந்த அதிகாரங்களை வழங்குவதில் உள்ள சந்தேகம் காரணமாகவே இழுத்தடிப்பு இடம்பெறுகிறது.முதலமைச்சர்கள் அந்த அதிகாரங்களை பிழையாக பயன்படுத்திவிடுவார்களோ என்ற சந்தேகம் இருந்து வருகிறது. முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி அதன் பின் அங்கிருந்து இதுபற்றி பேசி முடிவெடுக்கலாம் என்றார்.

**அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்துக்கு முன் ஜனாதிபதி தேர்தலுக்கு செல்ல முடியாது. அப்படிச் சொல்வதாயின் அரசமைப்பை திருத்த வேண்டும்.**

தொடர் 11



# பிரபாவின் இறுதி நிமிடம்...!!



ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

## அம்புலன்ஸில் தப்பிச் சென்றாரா பிரபாகரன்..???
## சார்ள்ஸ்-சூசை கொல்லப்பட்டது இப்படித்தான்



உயிருடனும் சிக்குகிறார்கள் சில புலிகள்.
வாவிக்குள் இருந்து...
அதற்குள் இருக்கும் புதர்களுக்குள் இருந்து...
அவர்களிடமிருந்து முக்கிய தகவல் ஒன்று.
அது என்ன..?
அதுதான் சூசையும் அங்கு.அந்த வாவிக்குள்.
உட்சாகம் பிறக்கிறது படையினருக்கு.
உடன் தாக்குதல் நடத்துங்கள்.
உத்தரவிடுகிறார் கமால் குணரத்ன கேரணல் ரவி பிரிய,லெப்டினன் கேணல் லலந்த கமகேவுக்கு...
இறங்குகிறார்கள் படையினர் வாவிக்குள்.
நடக்கிறது சண்டை.

காலையிலும் தொடர்கிறது சண்டை.
அது நீருக்குள்.. நீருக்குள்தான் பகல் சண்டை.
இடைவிடா சண்டை.பிற்பகல் வரை...
இரவு கடும் சண்டை அதன் பலாபலன்கள் என்ன...?
நடக்கிறது தேடுதல்.சிக்குகின்றன பல உடல்கள்.புலிகளின் உடல்கள்.
ஒரு புறம் சண்டை. மறுபுறம் தேடுதல்.
எல்லா இடங்களிலும் உடல்கள். புலிகளின் உடல்கள்.
நிலத்திலும் வாவியிலும்.
மிதக்கின்றன வாவியில்..
கூடவே படகுகளும்...
ஒன்றுசேர்க்கிறார்கள் படையினர் அந்த உடல்களை.
ஓரிடத்தில் பல உடல்கள்.நிலத்தில்...
12 உடல்கள்.
எடுத்த எடுப்பில் நெருங்க முடியாது.
அவர்கள் தற்கொலை புலிகளாலாக இருக்கலாம்.இறந்ததுபோல் நடிக்கலாம்.
அருகில் சென்றதும் குண்டுகளை வெடிக்கச் செய்யலாம்.
இதனால் கவனமாகக் கையாள வேண்டும். பாதுகாப்போடு...
அப்படியே செய்கிறார்கள்.சோதிக்கிறார்கள் கவனமாக...
இல்லை.12 உம் இறந்த உடல்கள்தான். எவருமே உயிருடன் இல்லை.
அவற்றில் ஒன்று வித்தியாசமானது.
தடித்த உடல்.வெள்ளைக்காரன் போன்ற நிறம்.
சோதித்துப் பார்க்கிறார்கள்.
படைத் தளபதிகளுக்கோ மகிழ்ச்சி.அதைக் கண்டதும்...
ஏன் தெரியுமா...
அது சார்ஸ் அன்டனி.
சிக்குகின்றன பல ஆவணங்கள் அவரிடமிருந்து...
அவரது அடையாள அட்டை.வயப.அவரது இலக்கம்.
கூடவே திருமண பதிவுச் சான்றிதழ். பட்டப்படிப்பு சான்றிதழ்.
அவர்களிடமிருந்து மேலும் பல பொருட்கள்.
1 கோடி 40 லட்சம் ரூபா பணம், பிஸ்டல், அதிக போசணை நிறைந்த உணவு வகைகள்,உலர் உணவு வகைகள்,குண்டுகள்,பல்வேறு வகையான ஆயுத வகைகள்,போர் தந்திரம் தொடர்பான புத்தகங்கள் போன்றவை.
அவர் பாவித்த துப்பாக்கி வித்தியாசமானது. வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டது.
வெள்ளவாய 5பற இராணுவ முகாமில் அந்தத் துப்பாக்கி இப்போதும்...
மேலும் பல தளபதிகளின் உடல்களும் அங்கே...
பானு,ஜெயம்,மாதவன் மாஸ்டர்,ரத்னம் மாஸ்டர் ஆகியோரின் உடல்களும் அங்கு.
ரத்னம் மாஸ்டரின் உடலைக் கண்டதும் மகிழ்ச்சி படையினருக்கு...
ஏன் தெரியுமா?
அவர்கள் நினைக்கிறார்கள் அதுதான் பிரபாகரன் என்று.
ஆம்..அவரின் தோற்றம் அப்படித்தான்.. பிரபாவைப்போல்தான்..
இறுதியில் தெரிய வருகிறது அது பிரபா அல்ல.ரத்னம் மாஸ்டர்.
இந்த நிலையில்...
உயிருடனும் சிக்குகிறார்கள் சில புலிகள்.
வாவிக்குள் இருந்து...
அதற்குள் இருக்கும் புதர்களுக்குள் இருந்து...
அவர்களிடமிருந்து முக்கிய தகவல் ஒன்று.
அது என்ன..?
அதுதான் சூசையும் அங்கு.அந்த வாவிக்குள்.
உட்சாகம் பிறக்கிறது படையினருக்கு.
உடன் தாக்குதல் நடத்துங்கள்.
உத்தரவிடுகிறார் கமால் குணரத்ன கேரணல் ரவி பிரிய,லெப்டினன் கேணல் லலந்த கமகேவுக்கு...
இறங்குகிறார்கள் படையினர் வாவிக்குள்.
நடக்கிறது சண்டை.
மீண்டும் ஒரு கொடூர சண்டை.
கமாண்டோ வீரர்களும் ஒருபுறம்.
20 பேர் கொண்ட அணி அது.
8-MEN TEAM இரண்டு.4-MEN TEAM ஒன்று.
முதல் நாளே வருகிறது அந்த அணி. நந்திக்கடலுக்கு...
17ஆம் திகதி.
பிற்பகல் 3 மணி.வந்திறங்குகிறது ஹெலி ஒன்று. MI 17.
அதில்தான் இந்த வீரர்கள்.
மிகத் திறமையான அணி.
வந்து இறங்கியதுமே சண்டை.
மறுநாள் அதிகாலை. 18ஆம் திகதி.மீண்டும் சண்டை. இருள் முற்றாக அகலும் முன்பே...
வாவிக்குள் இறங்குகிறார்கள் படையினர்.புலி வேட்டைக்கு...
தொடர்கிறது யுத்தம்.அகோர சண்டை.
எல்லோரும் நீருக்குள்...
திடீரென மூழ்குவதும் மேலே எழுவதுமாக படையினர்.
அவ்வளவு ஆழம்...
எல்லாம் ஆர்டிலரி குண்டுகளாகும் விமானத் தாக்குதல்களாலும் உண்டான குழிகள்.
நடக்கிறது சண்டை.
எதிரே சில புலிகள். மரங்கள்-பற்றைகள்-புதர்களுக்குள் மறைந்துகொண்டு...
குறி வைக்கிறார்கள் இந்தப் படையினரை. கண்ணில் படுகிறது இந்தக் காட்சி.
கோப்ரல்.பெயர் ஜயரத்ன பண்டார.ஜ கோப்ரல் தார்சனின் ஸ கண்களில்...
முந்துகிறது இவரது துப்பாக்கி. அவ்வளவுதான்.சரிகிறான் அந்தப் புலி.







நீருக்குள்...
தொடர்ந்து வருகின்றன புல்லட்கள் இவர்களை நோக்கி...
அதற்குள்-அந்தப் புலிகள் கூட்டத்துக்குள் ஒரு தடித்த உருவம்.
சுடுகிறது இவர்களை நோக்கி.தார்சனை நோக்கி படவில்லை.
எதிர்த்தாக்குதல் நடத்துகிறார் தார்சன். படுகிறது அந்த உருவத்துக்கு.சரிகிறது நீருக்குள்...
பற்றைக்குள் மறைந்திருந்த அத்தனை புலிகளும் சரி.
அங்கே பல உடல்கள்.புலிகளின் உடல்கள்.
இழுக்கிறார்கள் அத்தனை உடல்களையும் வெளியே...
அந்த தடித்த உருவமும்கூட...
கரையில் போடுகிறார்கள்.பார்த்துப் பழக்கப்பட்ட உருவம் அது.
கடற்புலிகளின் தளபதி சூசைபோல் தெரிகிறது.
எதற்கும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
அழைத்து வரப்படுகிறார்கள் சில புலிகள். கைது செய்யப்பட புலிகள்.
அடையாளம் காண்கிறார்கள்.
ஆம்...அவர் சூசைதான்....
சூசை கொல்லப்பட்டது இப்படித்தான்...
அம்புலன்ஸில் தப்பிச் சென்றாரா பிரபாகரன்..???
இதே தினம்தான் இன்னொரு சம்பவம்.
அதுதான் பிரபாகரன் அம்பியுலான்ஸில் தப்பிச் செல்ல முற்பட்டார் என்றும் அப்போது சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் சொல்லப்பட்ட சம்பவம்.
உண்மையில் அப்படி நடந்ததா...???
இல்லை...
நடந்தது இப்படித்தான்.
பல படையினர் காயம். அந்தத் தாக்குதலில்..18 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலில்...
அவ்வாறு காயமடைந்த சிப்பாய் ஒருவரை ஏற்றுகிறார்கள் படையினர் அம்பியூலன்ஸில்..
விரைகிறது சிகிச்சை நிலையத்துக்கு...
அப்போது பற்றைக்குள் மூன்று புலிகள்.
17ஆம் திகதி உள்நுழைந்த புலிகள் அவர்கள்.
பலர் சுட்டுக்கொல்லப்பட்டபோதிலும் சிலர் இன்னும் அங்கே.அடர்ந்த பற்றைகளுக்குள்..
முதலாவது பாதுகாப்பு லைனுக்கும் இரண்டாவது பாதுகாப்பு லைனுக்கும் இடையில்...
பாய்கிறார்கள் அந்த வாகனத்தை நோக்கி...
சுடுகிறார்கள் அந்த படையினரை. அம்பியூலன்ஸில் இருக்கும் படையினரை...
ஆனால்,தப்புகிறார்கள் படையினர் பாய்கிறார்கள் வாகனத்தை விட்டு...
சாரதியும் காயமடைந்த சிப்பாயும்...
வெடிச் சத்தம் கேட்க...அத்திசையை நோக்குகிறார்கள் படையினர்.
அங்கே மூன்று புலிகள்.
நுழைகிறார்கள் அம்பியூலன்ஸிற்குள். சுட்டுக்கொண்டு..
வைத்துப் பிடிக்கிறார்கள் படையினர்.அந்தப் புலிகளை நோக்கி..
படுகின்றன வெடில்கள் அந்தப் புலிகள்மீதும்... அந்த வாகனத்தின்மீதும்...
அந்த இடத்திலேயே சரி.
அந்த உடல்கள் மூன்றும் அம்பியூலன்ஸிற்குள்
தீப்பற்றுகிறது அம்பியூலன்ஸ்.
இரு புலிகளில் ஒருவர் சற்று தடித்த உடலைக்கொண்டவர்.
பிரபாகரனைப் போல்...
இதைக் கண்ட படையினர் நினைக்கிறார்கள் அவர் பிரபாகரன் என்று...
அப்போது பரவுகிறது கதை ஒன்று.
“பிரபாகரன் அம்பியூலன்ஸில் தப்பியோடும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்...“.
அவர் பிரபாகரன்தானா...?
விரைந்து சென்று சோதிக்கிறார்கள் படைத் தளபதிகள்.
இல்லை.. பிரபாகரன் இல்லை.
பிரபாகரனின் உருவம்போன்ற தடித்த உருவம்.
இப்படித்தான் பரவியது அந்தக் கதை.

(தொடரும்...)

# எல்லோரும் வீடு சென்ற பின்...




ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்பி பைசல் காஸிமின் மகனின் திருமணம் கடந்த இரு வாரங்களுக்கு முன் இடம்பெற்றது.

மஹிந்த ராஜபக்ஸ,எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா உள்ளிட்ட பல அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

எல்லோரும் உரிய நேரத்தில் சமூகம் கொடுத்தனர்.ஆனால்,சஜித் மட்டும் தாமதம். தாமதம் என்றால் ஓரிரு நிமிடங்களோ. ஓரிரு மணித்தியாலங்களோ அல்ல.

திருமணம் முடிந்து எல்லோரும் சாப்பிட்டுவிட்டு வீடு சென்றபின்தான் அவர் வந்தார்.

# மஹிந்தவால்தான் அந்த சண்டை



மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றம் செல்லும்போது அவரை வரவேற்பதற்கு எம்பிக்கள் கூட்டம் ஒன்று காத்துக்கிடப்பது வழமை.

கடந்த வாரமும் அப்படித்தான்.காமினி லொக்குகே,சாமர சம்பத் தசாநாயக உள்ளிட்ட பலர் மஹிந்தவை வரவேற்பதற்கு நின்றனர்.

மஹிந்த வந்ததும் அவர்களிடையே உரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அப்போது காமினி லொக்குகே எம்பி சாமர சம்பத் தசாநாயக்கவை பார்த்துக் கேட்டார்.

“என்ன அந்த களுத்துறை எம்மியோட கடும் சண்டையாம்...“ என்று கேட்டார்.

எல்லாம் மஹிந்த சேரலாதன் என்றார் சாமர.

“என்னாலயா...? வியப்புடன் கேட்டார் மஹிந்த.

“ஆமா..சேர்.உங்கட போட்டோவ போட்டு வெற்றி பெற்றுவிட்டு உங்களையே ஏசி திரியுறார்.அதுதான் குடுத்தேன் நல்லா..“ என்றார் சாமர..

சா...என்னவொரு விசுவாசம்...

# சாபமிட்ட பெண்

மொட்டு கட்சியின் மினுவாங்கொட தொகுதி கூட்டம் கடந்த வாரம் அமைச்சர் பிரசன்ன தலைமையில் உடுகம்பொலவில் உள்ள பிரசன்னவின் வீட்டில் இடம்பெற்றது.

அப்போது அதில் கலந்துகொண்ட ஒரு பெண் பிரசன்னாவின் கையைப் பிடித்து,,,

““ சேர்..எங்களை விட்டு போயிடாதீங்க. ஆகக்குறைந்தது வாரத்தில் ஒரு தடவையாவது இங்கு வந்து எங்களை பாத்துட்டு போங்க. கலவரக் காலத்தில் என்னை காப்பாற்றியவர் உங்கள் தந்தை. அவரது காலத்தில் இருந்தே அவருடன் இணைந்து அரசியல் செய்கிறோம். உங்களது இந்த வீட்டை எரித்தவர்களுக்கு சாபம் உண்டாகட்டும்..““

என்று கூறி சாபமிட்டார் அந்தப் பெண்.






# அது அரச ரகசியம்



அந்த நிகழ்வில் இரண்டு வீடியோக்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

அதைப் பார்த்த மஹிந்தானந்த அழுத்கமகே, “இந்த வீடியோவுல பிரசன்ன நல்ல அழகு “ என்றார்.


திஸ்ஸ .குட்டியாராய்ச்சி சொன்னார்.““ நன்றாக உடல் மெலிந்து உள்ளிட்டர்கள் .அதன் ரகசியம் என்ன என்று கேட்டார்.

அது அரச ரகசியம்.சொல்ல முடியாது என்றார் பிரசன்ன சிரித்துக்கொண்டு.

இருந்தாலும் தடித்த உடல்தான் உங்களுக்கு அழகு என்றார் திஸ்ஸ.

நான் இப்போதொதெல்லாம் நன்றாக உடற் பயிற்சி செய்கிறேன்.அதுதான் உடல் மெலிவதற்கு காரணம் என்று சொன்னார் பிரசன்ன.

# ஜனாதிபதி கனவில் விமல்...



சுயாதீன எம்பிக்கள் அனைவரையும் உள்ளடக்கிய புதிய அரசியல் பயணம் ஒன்றைத் தொடங்கியுள்ளார் நிமல் லான்சா எம்பி.

சுயாதீன எம்பிக்களை சந்தித்து அவரது திட்டத்தை விளக்கி வருகிறார்.அந்த வகையில் விமல் வீரவன்ச எம்பி உள்ளிட்ட குழுவுடனும் சந்திப்பை மேற்கொண்டார்.

அப்போது விமல் கேட்டார்.

நீங்கள் இப்படியொரு வேலையைத் தொடங்கியுள்ளதாக கேள்விப்பட்டேன்.நீங்கள் எண்ணிடம் முன்கூட்டியே சொல்லவில்லையே என்றார் விமல்.

ஜனாதிபதி கனவில் இருப்பவர்களுடன் அதுபற்றி நான் பேசவில்லை என்றார் நக்கலாக.

விமல் அதை உடனே மறுத்துவிட்டார்.எனக்கு அப்படியொரு கனவு இல்லை என்று கூறினார்.

# பழைய நண்பனை சந்தித்த மஹிந்த



நீண்ட நாட்களுக்கு பின் மஹிந்த ராஜபக்சவுக்கு அவரது பாடசாலை காலத்து நண்பன் ஒருவரை சந்திக்கக் கிடைத்து.

அவர்தான் ராஜித சேனாரத்ன.

ஒரு திருமண வைபவம் ஒன்றில்தான் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. அப்போது இவர்கள் இருவரையும் பல அரசியல்வாதிகள் சூழ்ந்துகொண்டார்கள்.

அவர்களிடம் ஒரு சில பாடசாலை காலஅனுபவங்களை பகிர்ந்துகொண்டார் மஹிந்த.

# ஹிந்தி பாடல் கேட்ட ரணில்



இந்திய முதலீட்டார்களால் அண்மையில் கொழுப்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதற்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைக்கப்பட்டிருந்தார். கூடவே அவரது பாரியாவும் சென்றிந்தார்.

நிகழ்வில் பாடல் பாடுவதற்கு இந்திய பாடகர் சிறீனிவாஸ் அழைக்கப்பட்டிருந்தார்.

அவரிடம் தனக்கு விருப்பமான ஹிந்தி பாடல் ஒன்றைப் பாட முடியுமா என்று கேட்டு ஒருவரிடம் செய்தி அனுப்பினார் ரணில்.

அது பொபி என்ற ஹிந்தி படத்தில் இடம்பெற்ற அயமை ளாயசை வழ யொமை என்ற பாடல்.

அவரது ஆசையை உடனே நிறைவேற்றினார் சிறீனிவாஸ். ரணிலும் அவரது பரியாரும் அந்தப் பாடலை மிகவும் ரசித்துக் கேட்டனர்.

தொடர் - 05





- சின்னத்தம்பி குருபரன் -

# இலங்கையில் சிறுபான்மையினர் புறக்கணிப்புக்களும் சுதந்திர சமத்துவமின்மையும்

## -ஒரு வரலாற்றுப் பார்வை-

பெரும்பான்மை மக்களின் வாக்குகள் அவர்களுக்குத் தேவைப்படுவதனால் சஜித் போன்றோர் தனது ஆட்சியில் 1000 விகாரைகள் அமைப்பதாதகவும் அறிக்கை விடுவதற்கும் காரணமாக அமைகின்றன.

பண்டா – செல்வா, டட்லி – செல்வா ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்படுவதற்குக் காரணமாக இருந்தவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா. அத்தோடு சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள். ஊர்வலங்கள், எதிர்ப்புக்கள் கலவரங்கள், யாழ் நூலக எரிப்பு ஆகியவற்றுக்குக் காரணமானவராக இருந்தவரும் அவரேயாவார்.

அவருடைய ஆட்சிக் காலத்தில் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் கலவரம், 1983 கறுப்பு ஜுலைக் கலவரம், தெற்காசியாவிலே சிறந்ததும், பல அரிய நூல்கள், சுவடிகள், ஆவணங்களைப் பேணிப் பாதுகாத்ததுமான யாழ்ப்பாண நூலகம் திட்டமிட்டு எரியூட்டப்பட்டமை, அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் ஊடாகத் தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி ஆட்சி செய்ய முற்பட்டமை பொன்றவற்றைச் சில உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

உலகின் முதலாவது பெண் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ அம்மையாரின் (1970-1977) ஆட்சிக் காலத்தில் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையைப் பறிக்கும் வகையிலான இலங்கையில் முதலாவது குடியரசு யாப்பு 25-05-1972 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெற்று நடைமுறைக்கு வந்தது.

அன்றிலிருந்து சிறுபான்மையினருக்கு எதிரான செயற்பாடுகள் திட்மிடடுக் கட்டவிழ்த்து விடப்பட்டன. இக்காலத்தில் பல தமிழ் அரசியல்வாதிகளும், இளைஞர்களும் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செயயப்பட்டனர்.

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் இறுதி நாளின்போது பேரினவாதிகளின் திட்டமிட்ட சதிக்கு இணங்க சிங்கள இராணுவத்தினர் தமது காடைத்தனத்தை வெளிப்படுத்தும் வகையில் மின்சாரக கம்பியைத் துண்டித்து தமிழ் இளைஞர்கள் பதினான்கு பேரைக் கோரமாகக் கொன்றொழித்தனர்.

போதாதென்று தமிழரின் கல்வியை நசுக்கும் வகையில் கல்வியில் தரப்படுத்தல் சட்ட மூலத்தையும் கொண்டுவந்து சிறுபான்மையினரை ஒடுக்க முற்பட்டனர். இத்தகைய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடத் துணிந்தவன்தான் சிவகுமாரன். தமிழ் அரசியல்வாதிகள் பின்பற்றிய அகிம்சை வழியில் இருந்து விடுபட்டு சிவகுமாரன் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கும், பிற்பட்ட காலத்தில் பல ஆயுதக் குழுக்கள் தோன்றுவதற்கும்,1987 இல் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தனிக் குழுவாக நின்று 2009 மே 19 வரை போராடியதற்கும் காரணமாய் அமைந்தவர்கள் பேரினவாத அரசியல்வாதிகளே.

யாழ்பாணத்தில் தமிழ் இளைஞர்களைக் காட்டிக் கொடுத்து ஆட்சியாளர்களின் கைப்பொம்மையாகத் திகழ்ந்தவர்களில் ஒருவரான அல்பேர்ட் துரையப்பாவைக் கொல்வதற்கான பல ஆயற்சிகளில் ஈடுபட்டு













சிவகுமாரன் வீரமரணம் அடைகின்றார்.

தமிழ் இளைஞர்களின் உள்ளங்களில் விடுதலைப் போராட்ட உணர்வை ஏற்படுத்திய சிவகுமாரனின் பாசறையில் வளரந்த விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் அல்பர்ட துரையப்பாவுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

சுதந்திர விடுதலைப் போராட்டத்தில் சேர்.பொன்.அருணாசலம், சேர். பொன்.இராமநாதன், டி.பி.ஜாயா, சேர். ராசிக் பரீட், முத்துக்குமாரசாமி, சேர். வைத்தியலிங்கம் துரைசாமி, கந்தையா வைத்தியலிங்கம், துரைராஜசிங்கம் காராளசிங்கம், அறிஞர் சித்திலெப்பை, ஏ.எம்.அப்துல் அஸீஸ், வாப்பச்சி மரைக்காயர் ஆகிய சிறுபான்மை இனத்தலைவர்கள் ஈடுபட்டிருந்தும் சுதந்திரத்தின் பலாபலன்கள் யாவற்றையும் அனுபவித்தவர்கள் பெரும்பான்மைச் சிங்களவர்களேயாவர்.

இவர்கள் தம்மோடு நாட்டின் சுதந்திர விடுதலைக்காகத் துணை நின்றார்கள் என்பதற்காக 1920,1931,1947,1972,1978 ஆம் ஆண்டுகளின் யாப்புச் சீர்திருத்தங்களில் சிறுபான்மையினரின் சுயநிர்ணயம், பாதுகாப்பு, சமத்துவம், நலன்பேணல் என்பவற்றைப் பேணத்தக்க வகையில் தாமாகவே முன்வந்து எதனையும் வழங்க முன்வரவில்லை என்பதனையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எவற்றையும் வழங்க முன்வராமல் சோல்பரி யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த சிறுபான்மையினர் சார்பான சரத்தினை நீக்குவதில் சகலரும் முன்னின்று செயற்பட்டனர்ரனர்.

1948-11-15 ஆந் திகதி கொண்டு வரப்பட்ட இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தின் கீழ், ஆறு இலச்சத்துக்கு மேற்பட்ட மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கினர் . அதில் சிறிமா – சாஸ்த்திரி ஒப்பந்தம் 1964) சிறிமா – காந்தி ஒப்பந்தம் (1974) அகியவற்றின் மூலம் 525,000 தோட்டத் தொழிலாளர்களை இந்தியா மீள அழைப்பதாகவும் 325,000 பேருக்கு 1964 – 1979 காலப்பகுதிக்குள் இலங்கை குடியுரிமை வழங்க வேண்டும் என்ற இணக்கப்பாட்டுக்கு வந்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அதன்படி இந்தியக் குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் 160,000 க்கு மெற்பட்டோர் மன்னார்  இராமேஸ்வரம் ஊடாகவும் வசதி படைத்தோர் விமானங்கள் மூலமாகவும் இந்தியாவுக்குச் சென்றனர். இவர்கள் செல்வதைத் தடுக்க முயற்சிக்காமல் தமிழ் தலைவர்கள் மௌனிகளாயினர்.

எட்வர்ட் பான்ஸ் ஆளுனர் (1823) காலத்தில் தமிழ் நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களில் இருந்து தோட்டங்களில் வேலை செய்வதற்காக அழைத்து வரப்பட்ட தொழிலாளர்கள் இரண்டு நூற்றாண்டுகள் கடந்த நிலையிலும் பல ஆயிரம் பேர் நாடற்றவர்களாகவும், இலச்சக் கணக்கானோர் வீட்டு வசதி அற்றவர்களாகவும் பழைய லயன் காம்பறாக்கனில் வசித்து வருகின்றனர்.

நாட்டின் வருமானத்தில் பெருமளவு பங்கு வகிக்கும் இவர்களை மனிதாபிமான நீதியாக அரசுகள் அணுகாதிருப்பது வேதனைக்குரியதாகும்.

சிங்கள அரசியல் தலைமைகள் தமது பதவி, செல்வாக்கு, புகழ், அதிகாரம், சலுகைகள், என்பனவற்றை பேணிப்பாதுகாப்பதற்காகச் சிறந்த கல்வி, கலாசார, குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவர்களும் சந்தர்ப்பவாதிகளாகவும், இனவாதிகளாகவும் தம்மை அடையாளப்படுத்தி இருக்கின்றனர்.

1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பினைத் தயாரிப்பதற்கான குழுவில் நியமனம் செய்யப்பட்டவர்கள் இருமுறை கலாநிதிப் பட்டம் பெற்ற என்.எம். பெரேரா, மற்றும் கொல்வின் ஆர்.டீ.சில்வா, பீட்டர் கெனமன், கொப்பேகடுவ, எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, பிலிப் குணவர்த்தனா, லெஸ்லி குணவர்த்தனா ஆகியோரே பொதுவுடமைப் பாசறையில் வளர்ந்த இடதுசாரிகளாவர்.

இத்தகையவர்களே சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமை, நலன், பாதுகாப்பு, தேசியம், தனித்துவம் ஆகியவற்றுக்கு ஆப்படிக்கின்ற 1972 ஆம் ஆண்டு யாப்பினை வரைந்தவர்களாவர்.

சுதந்திரத்தின் பின்னர் பேரினவாதிகளும் சந்தர்ப்பவாதிகளும், சிங்கள அரசியல்வாதிகள் பலரும் நவகாலணித்துவ சிந்தனாவாதத்துக்கு அடிமையாகி சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சிறுபானமையினரை அடக்கி ஒடுக்கியே வந்திருக்கின்றனர்.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் அவரின் ஆசீர்வாத்த்துடன் இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் இரண்டாவது அரசியல் யாப்பு ஐந்தில் நான்கு பங்கு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் 1978 இல் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள், போராட்டங்கள், கலவரங்கள் ஆகியவற்றுக்குக் காரணமாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கண்காணிப்பில் நிறைவேற்றப்பட்ட யாப்பில் சிறுபான்மையினரின் நலன்கள் எந்தளவு பூர்த்தி செய்யப்படும் என்பதனைக் கூறாமலே புரிந்து கொள்ளலாம்.

தொடரும்...

# சிங்கரினால் கணினிகள் அறிமுகம்




இலங்கையில் Dell தயாரிப்புகளின் உத்தியோகபூர்வ விநியோகஸ்தரான சிங்கர், 13வது தலைமுறை Inspiron மற்றும் Vostro தனிநபர் மற்றும் வர்த்தகப் பயன்பாட்டுக்கான Dell சாதனங்களை அறிமுகபடுத்தியுள்ளது.

சிங்கர் தனது அனைத்து தயாரிப்புகளும் முறையான மற்றும் சட்டபூர்வமான வழிமுறையில் பெறப்படுவதை உறுதி செய்கிறது.

சிங்கர் தனது விநியோக செயல்முறையில் கொண்டுள்ள அர்ப்பணிப்பு காரணமாக, சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம் தொடர்ந்து மூன்றாவது முறையாக இலங்கையில் 'ஆண்டின் சிறந்த விநியோகஸ்தர், வாடிக்கையாளர் தீர்வுகள் குழு (வணிகம்)' என்ற விருதை சுவீகரித்துள்ளது.

தற்போதைய அறிமுகத்திலும் இந்த அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது. குறைவடைந்துள்ள நாணய மாற்று வீதங்கள் மற்றும் சாதகமான தேசிய பொருளாதார சூழ்நிலைகள் மூலம் பெறப்படும் அனைத்து நன்மைகளும் நுகர்வோருக்கு வழங்கப்படுவதை சிங்கர் உறுதி செய்கிறது.

# SLT-MOBITEL இன் 5G பரீட்சார்த்த விரிவாக்கம்




SLT-MOBITEL, அண்மையில் முன்னணி தகவல் தொழில்நுட்ப மற்றும் ERP தீர்வுகள் வழங்குநரான Pristine Innovations (Pvt) லிமிடெட் உடன் இணைந்து இலங்கையில் 5G பரீட்சார்த்த அப்ளிகேஷன்களை உருவாக்குவதற்கு முன்வந்துள்ளது.


இந்தக் கைகோர்ப்பினூடாக, 5G தொழில்நுட்பம் மற்றும் அதன் ஆற்றல்கள், டிஜிட்டல் மயமாக்கல் வாய்ப்புகள் மற்றும் 5G தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புத்தாக்கங்களை ஊக்குவிப்பது தொடர்பில் பங்காளர்களுக்கு உள்ளார்ந்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

5பு இற்கு மேலதிகமாக, NB-IOT மற்றும் யுஜ போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி முன்னணித் திட்டத்தை SLT-MOBITEL மற்றும் Pristine அணியினர் பின்பற்றி, 5G அடிப்படையிலான Remote Control Racing Car மற்றும் 5G அடிப்படையிலான FPV Racing Drone ஆகியவற்றை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளன.

இவை இரண்டும் உள்ளகத் தயாரிப்புகளாகும். இந்த இரு அலகுகளின் கட்டுப்பாடு மற்றும் வீடியோ ஸ்ட்ரீமிங் போன்றவற்றுடன் தொடர்புடைய தொடர்பாடல்கள் SLT-MOBITEL இன் நவீன 5G பரீட்சார்த்த வலையமைப்பினூடாக ஊக்குவிக்கப்பட்டிருந்தது.

அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களை வேகமாக பின்பற்றுவதற்கு பங்காளர்கள் மற்றும் ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு ஊக்குவிப்புகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை SLT-MOBITEL உணர்ந்துள்ளது. அதனூடாக டிஜிட்டல் மயமாக்கல் வாய்ப்புகளின் விரிவாக்கம் மற்றும் டிஜிட்டல் வாழ்க்கை முறைகளுக்கு வலுவூட்டல் போன்றன ஊக்குவிக்கப்படுகின்றன.

# இலங்கை வங்கி தொடர்ந்தும் முதலிடம்



இலங்கை வங்கி வரையறுக்கப்பட்ட 'மீடியா சேவிசஸ்' தனியார் நிறுவனத்துடன் 'பிராண்ட் ஃபைனான்ஸ் லங்கா' நிறுவனம் இணைந்து வெளியிட்ட "Brand Annual Services 2023" எனும் இதழில் "AAA" என்ற வணிக நாம மதிப்பீட்டைப் பெற்று தொடர்ந்து 15ஆவது ஆண்டாகவும் இலங்கையின் முதற்தர வங்கியியல் வணிக நாமம் என்ற கௌரவத்தைப் பெற்றுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான வணிக நாம மதிப்பு 50 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமாகும். இது இலங்கை வங்கித்துறையில் வேறெந்த வங்கியும் தொட்டிடா உச்சமாகும். நாட்டின் வங்கித் துறையில் முன்னோடியாக 84 வருடங்களை நிறைவு செய்யும் இலங்கை வங்கிக்குக் கிடைத்துள்ள இக்கௌரவமானது வங்கி 1939ஆம் ஆண்டு நாட்டு மக்களின் பொருளாதார விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்திற்கு இதுகாறும் உண்மையாக இருப்பதை மீள உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

பல நாடுகளில் உலகளாவிய பிரசன்னத்தைக் கொண்ட ஒரு சுயாதீன வர்த்தக நாம ஆலோசனை நிறுவனமான Brand Finance Lanka உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான முறையைப் பின்பற்றி பதினைந்து வருடங்களாக இலங்கை வர்த்தக நாமங்கள் பற்றிய வர்த்தக நாமப் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வங்கியின் பொது முகாமையாளர் திரு. ரசல் பொன்சேகா, "எம் நாட்டு மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து அவர்களின் நம்பகமான நிதிப் பங்காளராக இரத்தமும் சதையுமாகக் கலந்துவிட்ட எமது பிணைப்பே நாட்டின் முதற்தர வங்கி என்ற எமது வெற்றிக்குக் காலாகும்.

இலங்கை வங்கியானது அதன் மாறா விழுமியங்களுடன் தன் நற்பெயரைப் பாதுகாத்து வருவதோடு தன் அனைத்துப் பங்கீடுபாட்டாளர்களினதும் நல்வாழ்வைக் கருத்திற் கொண்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய நிதிச் சேவையை வழங்குகிறது. இவ்வுயரிய நோக்கம் அதன் அனைத்து வகையான செயற்பாடுகளிலும் தொடர்பாடல்களிலும் வெளிப்படுவதோடு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதையும் காணலாம்" என்றார்.



# காங்கேசன்துறைக்கு வந்த Cordelia Cruises கப்பல்

வட மாகாணத்திற்கான கடல்சார் பயணம் மற்றும் சுற்றுலாவின் புதிய சகாப்தத்தை முன்வைத்து, Cordelia Cruises ஸிலிருந்து இலங்கைக்கான முதல் சொகுசுக் கப்பலான MS Empress, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை துறைமுகத்தில் (KKS) வரவேற்பு அறிக்கப்பட்டது.

துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் கீத் பெர்னார்ட் மற்றும் Advantis குழுமத்தின் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் KKS துறைமுகத்தில் நடைபெற்ற சம்பிரதாய வரவேற்பு நிகழ்வுகளுடன் Cordelia Cruises இன் குழுவினருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

"யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதமான கப்பல்துறையில் MS Empress கப்பலை நேரில் பார்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இது KKS துறைமுகத்திற்கு ஒரு சொகுசு பயணக் கப்பல் வந்தடைந்தது முதன்முறையாகும்.

"இந்த முயற்சியின் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகை விருந்தோம்பல், சில்லறை விற்பனை, போக்குவரத்து மற்றும் உள்ளூர் வணிகங்கள் உட்பட பல்வேறு துறைகளைத் தூண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம், மேலும் ஆளு நுஅிசநளள அழைக்கும் மூன்று பிராந்தியங்களான ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளிலுள்ள சமூகங்களுக்கும் மிகவும் சிறப்பான தாக்கத்தை உருவாக்குகிறது" என கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.




# DFCC Leasing மற்றும் Micro Cars இணைவு

பொதுமக்களுக்கு கூட்டு குத்தகை ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காக DFCC Leasing மற்றும் Micro Cars ஆகியன புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த கூட்டு முயற்சியானது தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரையில் இரு நிறுவனங்களாலும் வழங்கப்படும் ஒருங்கிணைந்த பலாபலன்களை அனுபவிப்பதற்கான சிறந்த வாய்ப்பாகும்.

ஏனையவற்றுடன் ஒப்பிடுகையில் நியாயமான கட்டண வீதங்கள், நெகிழ்வுடனான மீள்கொடுப்பனவுத் தெரிவுகள், உயர்தர தயாரிப்புகள் மற்றும் இரு முனைகளிலும் பிரத்தியேகமயப்படுத்தப்பட்ட சேவை போன்ற பல வரப்பிரசாதங்கள் இவற்றுள் அடங்கியுள்ளன.

Micro Cars நிறுவனத்தின் Saic Almaz SUV மற்றும் Proton Saga Sedan ஆகியவை இந்த விசேட கூட்டு குத்தகை ஊக்குவிப்பின் கீழ் வழங்கப்படும் முக்கிய மோட்டார் வாகன வகைகளாகும்.

இந்த கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த DFCC வங்கியின் தனிநபர்களை மையப்படுத்திய வங்கிச்சேவை மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான சிரேஷ்ட துணைத் தலைவரான திரு ஆசிரி இத்தமல்கொட அவர்கள், "பிரத்தியேகமயப்படுத்தப்பட்ட குத்தகை தீர்வுகளை வழங்குவதில் DFCC Leasing நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளதுடன், இந்த கூட்டு ஊக்குவிப்பு எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்கான எங்கள் அர்ப்பணிப்புக்கு மற்றொரு எடுத்துக்காட்டு. என்றார்.

# ஜனசக்திக்கு 2 விருதுகள்



இலங்கையில் ஆயுட் காப்புறுதி வழங்குனர்களில் முன்னோடியாய்த் திகழும் Janashakthi Life.Insurance Asia Awards விருதுகள் வழங்கும் நிகழ்வில் மதிப்புமிக்க இரண்டு விருதுகளை வென்றது.

இந்நிகழ்வானது ஆசியாவில் முன்னணி வகிக்கும் காப்புறுதி நிறுவனங்களை ஒன்று கூடச் செய்வதுடன் அவர்களது அதிசிறந்த முன்னெடுப்புக்களை, புத்தாக்கம்மிக்க தயாரிப்புக்களை மற்றும் உறுதியான தீர்வுகளை கொண்டாடுகின்றது.

அவ்வாறு பெறப்பட்ட இரண்டு பெருமைமிகு விருதுகளாக ஆண்டுக்கான சிறந்த உள்நாட்டு ஆயுட் காப்புறுதியாளர் – இலங்கை மற்றும் ஆண்டுக்கான சிறந்த டிஜிட்டல் காப்புறுதி முன்னெடுப்பு – இலங்கை என்பவை காணப்படுகின்றன.

இந்த பாராட்டுக்கள் சவால்கள் நிறைந்த மெக்ரோ பொருளாதார நிலைமைகளின் மத்தியிலும் வலுவான நிதிச்செயற்பாட்டின் விளைவாக முன்னோடியான காப்பீட்டுத் தீர்வுகளுக்கான நிறுவனத்தின் நிலையான உறுதிப்பாட்டினை இது பிரதிபலிக்கிறது.

துயயெளாயமவாை டுகைந ஆனது Insurance Asia Awards விருதுகள் வழங்கும் நிகழ்வில் ஆண்டுக்கான சிறந்த உள்நாட்டு ஆயுட் காப்புறுதியாளர்கள் – இலங்கை என்ற விருதினை தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டிலும் சுவீகரித்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# உழவு இயந்திர விற்பனையில் முன்னணி



நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் (4WD) விற்பனையில் முன்னணியில் திகழும் Hayleys Agriculture

கடந்த ஏப்ரல் மாத்தில் (2023) அதிக எண்ணிக்கையிலான உழவு இயந்திர விற்பனையை Hayleys Agriculture பதிவு செய்தது.

இது மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் (RMV) பதிவு செய்யப்பட்ட அதிக எண்ணிக்கையான பதிவாகும். அதற்கமைய 2023 ஏப்ரலில் நிறுவனம் சந்தையில் பாரிய ஆதிக்கத்தை செலுத்தியுள்ள அதே நேரத்தில், அதன் உச்சபட்ச சந்தைப் பங்கையும் பெற்றுள்ளது.

குபோட்டா மற்றும் இ-குபோட்டா வர்த்தகநாமங்களில், மொத்த உழவு இயந்திர பதிவுகளில் 52% பங்கையும், நான்கு சக்கர (4WD) உழவு இயந்திர பிரிவு விற்பனையில் 70.4% பங்குகளையும் நிறுவனம் பதிவு செய்துள்ளது.

அதற்கமைய, இவ்வாறான அதிக எண்ணிக்கையிலான வாகனப் பதிவுகள் மற்றும் சந்தைப் பங்கு வீதங்களை பதிவு செய்துள்ளமையானது, இலங்கையில் உள்ள விவசாயிகள் இத்தயாரிப்புகளுக்காக Hayleys Agriculture நிறுவனத்தை தங்களது விருப்பமான விநியோகஸ்தராக தெரிவு செய்கிறார்கள் என்பதை நிரூபிக்கிறது.

நிறுவனத்தின் முக்கிய வணிக கூட்டாளரான ஜப்பானின் Kubota Corporation, நம்பகமான தனது விற்பனைக்கு பிந்தைய சேவைகள், நிலைபேறான விவசாய நடைமுறைகளில் தனது அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன், உயர்தர தயாரிப்புகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் நற்பெயரே இதற்கான முற்றிலுமான காரணங்களாக விளங்குகின்றன.

Hayleys Agriculture Holdings Limited நிறுவனம் மற்றும் ஜப்பானின் Kubota Corporation ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டாண்மை மூலம், இலங்கை விவசாயிகளுக்கு குபோட்டாவின் சமீபத்திய தொழில்நுட்பம், உயர்தர உழவு இயந்திரங்கள், கூட்டு நெல் அறுவடை இயந்திரங்கள் (Paddy Combine Harvesters), அரிசி மாற்று இயந்திரங்கள் (Rice Transplanters) போன்றன, விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியன வழங்கப்படுகின்றன.

வர்த்தக சுடர்

# பூநகரியை வலுப்படுத்தும் சன்ஷைனின் அறக்கட்டளை



யாழ்ப்பாணம் பூநகரி பிரதேசத்தில் வசிப்பவர்களின் வாழ்வில் நம்பிக்கையை மீட்டெடுக்கும் முயற்சியில், Sunshine Foundation for Good (SFG), சன்ஷைன் ஹோல்டிங்ஸின் பெருநிறுவன சமூக பொறுப்பு (CSR) பிரிவானது பள்ளிக்குடா, பல்லவராயன்கட்டு மற்றும் கௌதாரிமுனை ஆகிய இடங்களில் மூன்று Reverse Osmosis (RO) ஆலைகளை நிறுவியது.

புதிய RO ஆலைகளின் அறிமுகம், இந்த கிராமங்களில் வசிக்கும் 2000 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குகிறது. SFG இன் "சிறந்த நீர், சிறந்த வாழ்க்கை" திட்டத்தின் கீழ் சமூகத்திற்கு ஆரோக்கியமான, மிகவும் வலுவான அத்தியாயத்தை திறந்துள்ளது.

சுகாதார சமத்துவத்தை மேம்படுத்துதல், உடல்நல அபாயங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை மேம்படுத்துதல் ஆகிய உலக சுகாதார அமைப்பின் (WHO) நோக்கத்தை அங்கீகரிப்பதன் மூலம், பாதுகாப்பான நீருக்கான வசதிகளை வழங்குவது சன்ஷைன் அறக்கட்டளையின் நன்மைக்கான முன்னுரிமையாக மாறியுள்ளது.

இன்று அனுராதபுரத்தில் இருந்து மன்னார், கதிர்காமம் முதல் முல்லைத்தீவு, பொலன்னறுவை முதல் நயினாதீவு வரையிலான விவசாய சமூகங்களில் காணப்படும் பல கிணறுகளில் கன உலோகங்கள் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் கூறுகள் இருப்பதால் அசுத்தமாகவும் பாதுகாப்பற்றதாகவும் காணப்படுகின்றன.

இத்தகைய இக்கட்டான சூழலில், அசுத்தமான நீரினால் ஏற்படும் ஊமுனூர இன் அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்கான செயல்முறை மூலம் பாதுகாப்பற்ற நீரை வழங்குவதன் மூலம் Reverse Osmosis (RO) செயல்படுத்துவது மிகவும் பயனுள்ள தீர்வாக நிரூபிக்கப்பட்டுள்ளது. RO தாவரங்கள் நாட்டிற்குள் ஊமுனூர இன் அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்கான முதன்மை முறைகளில் ஒன்றாகும். ஒரு சுழு ஆலை ஒரு சிறிய கிராமத்திற்கு (ஒரு நாளைக்கு 5,000 முதல் 10,000 லிட்டர்கள்) போதுமான அளவு தண்ணீரைச் செயலாக்கும் திறன் கொண்டது.




# CDB இற்கு Dare to Dream விருது

இலங்கையின் முழுமையான நிதிச் சேவைகள் வழங்குநரான சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் / பினான்ஸ் பிஎல்சி (CDB), அறிமுக Dare to Dream விருதுகள் 2023 இலங்கை பதிப்பு நிகழ்வில் ஆண்டின் மிகவும் புத்தாக்கமான நிறுவனமாக கௌரவிக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வுக்கு SAP மற்றும் ஜோன் கீல்ஸ் IT அனுசரணை வழங்கியிருந்தன. தூர நோக்கிலமைந்த தொழில்நுட்ப புத்தாக்கங்கள் மற்றும் இலங்கையில் டிஜிட்டல் மாற்றியமைப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அர்ப்பணிப்பு போன்றவற்றினூடாக, நிதிச் சேவைகள் துறையில் புரட்சியை ஏற்படுத்துவதில் CDB இன் அர்ப்பணிப்பை உறுதி செய்வதாக இந்த விருது அமைந்துள்ளது.

புத்தாக்கம், தொழில்நுட்ப பின்பற்ற மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்பு ஆகியவற்றில் முன்னோடிகளாக அமைந்திருக்கும் தூர நோக்குடைய சிந்தனையாளர்களை கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

CDB வணிக செயற்பாடுகள் பணிப்பாளர் டேவ் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் நிதிச் சேவைகள் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்திய புத்தாக்கமான தொழில்நுட்ப தீர்வுகளை நடைமுறைப்படுத்தியிருந்த எமது அணியினரின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கான சிறந்த எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளது." என்றார்.

# Prime Group உடன் இணையும் HNB




ரியல் எஸ்டேட் துறையை புத்துயிர் பெறச் செய்வதற்கு உழைத்து வரும் இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, எதிர்கால வீட்டு உரிமையாளர்களுக்கு குறைந்த வட்டி விகிதங்கள் மற்றும் பிரத்தியேக நன்மைகளை வழங்குவதற்காக சந்தையில் முன்னணியில் உள்ள Prime Group உடனான தனது நீண்டகால கூட்டாண்மையை புதுப்பித்துள்ளது.

இந்த கூட்டு முயற்சியானது நாடு முழுவதும் உள்ள Prime Real Estateஇல் காணிகளை வாங்க ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களுக்கு கவர்ச்சிகரமான நிதி வசதிகள் தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நிகழ்வை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட வைபவத்தில் HNBஇன் சஞ்ஜேய் விஜேமான்ன மற்றும் Prime Groupன் சந்தமினி பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

"தற்போதைய நெருக்கடியின் காரணமாக கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்து வருவதால், வணிகங்கள் மற்றும் தனிநபர்கள் இரு பிரிவினரும் தங்கள் சொத்து தொடர்பான திட்டங்களை கடுமையாக மாற்ற வேண்டியுள்ளது.

காணி கட்டட விற்பனைத் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தாலும், மக்கள் இன்னும் வீடு கட்ட வேண்டியிருப்பதால், சொத்துக்கான தேவை எப்போதும் இருக்கும் என்பதே நாம் எதிர்கொள்ளும் உண்மை. பல வருங்கால வீட்டு உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, வாடிக்கையாளர்களுக்கு சந்தையில் கிடைக்கும் சிறந்த தேர்வுகளை வழங்குவதில் நாங்கள் பணியாற்றினோம்." என HNBஇன் பிரதி பொது முகாமையாளர் வாடிக்கையாளர் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவுப் பிரிவு, சஞ்ஜேய் விஜேமான்ன தெரிவித்தார்.